**செ.வெ. எண்: 412** **நாள்: 16.07.2012**

# செய்தி வெளியீடு

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்தில் பதிவு செய்யப்பட்ட டி.என். 2/FV/01305/11 என்ற பதிவு எண் கொண்ட மீன்பிடி விசைப்படகு ஒன்று, 10 மீனவர்களுடன் 12-07-2012 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றது. அப்படகு அன்றே கரைக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் அப்படகு கரைக்கு திரும்பாததால், காணாமல் போனதாக தகவல் பெறப்பட்டது.

காணாமல் போன படகு மற்றும் 10 மீனவர்களையும் உடனடியாக தேடிக் கண்டுபிடித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் இந்திய கடலோர காவற்படை அதிகாரிகளுடன் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளப்பட்டு மீனவர்களை தேடும் பணி மீன்வளத் துறையால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையே 10 மீனவர்கள் மற்றும் படகும் இலங்கைக்குட்பட்ட பகுதியில் இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டதாக அறியவந்தது. இந்திய கடலோர காவற்படை, கொழும்பிலுள்ள கடலோர மீட்பு மற்றும் ஒருங்கிணைப்பு மையத்துடன் தொடர்பு கொண்டு இதனை உறுதிபடுத்திய பின்னர், ‘‘அகல்யாபாய்’’ என்ற கப்பலை அனுப்பி, மீனவர்களையும், படகினையும் மீட்டு, தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திற்கு இன்று அதிகாலை (16-07-2012) கொண்டு சேர்த்தது. பின்னர், மேற்படி 10 மீனவர்களும் சின்னமுட்டம் சென்றடைந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக, மீனவர்கள் உடனடியாக மீட்கப்பட்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 16.7.2012